கலைஞரும் நானும்

96

“பத்திரிகையாளராகவும், எழுத்தாளராகவும் இருந்ததால், அவரால் எல்லா விமர்சனங்களையும் தாங்கிக்கொண்டு கருத்துச் சுதந்திரத்துக்கும் எழுத்துச் சுதந்திரத்துக்கும் மதிப்புக் கொடுக்கத் தெரிந்திருந்தது” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் மூத்த பத்திரிகையாளர் வாஸந்தி.

“தொண்டர்களின் அன்பால் நிரம்பியவர்!”

வாஸந்தி, பத்திரிகையாளர்

கர்நாடக மாநிலத்தில் பிறந்து வளர்ந்தவள் நான். தமிழ் பேசும் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், பெங்களூரிலும் பிறகு வட இந்தியாவிலும் அதிகமாக வசித்திருந்தேன். 1993-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ‘இந்தியா டுடே’ இதழ் தமிழ்ப் பதிப்பின் ஆசிரியராகப் பணிபுரிவதற்காக சென்னை வந்தேன். இங்கு எனக்குப் பல கலாச்சார அதிர்ச்சிகள் காத்திருந்தன. அதற்கு நிச்சயமாக, நான் என்னைத் தயார் செய்து கொண்டிருக்கவில்லை. எனக்குக் கிடைத்த முதல் அதிர்ச்சியே என்னைத் தடுமாற வைத்தது. அந்த அதிர்ச்சியை அளித்தவர் கலைஞர்தான்.

ஆங்கிலப் பதிப்புக் கட்டுரை

நான் ஆசிரியர் பொறுப்பினை ஏற்ற புதிது. ‘இந்தியா டுடே’ ஆங்கிலப் பதிப்பில் கலைஞர் அவர்களின் குடும்பத்தைப் பற்றி ஒரு கட்டுரை இடம் பெற்ற வாரத்தில், அதன் தமிழாக்கம் தமிழிலும் வரவேண்டியிருந்தது. அதன் மொழியாக்கம் என் பார்வைக்கு வந்தது. அதில் இருந்த ஒரு வரி தேவையற்றது என்று, அதை பேனாவால் அடித்திருந்தேன். பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பக்கத்தையும் பார்த்தேன். அந்த வரி நீக்கப்பட்டிருந்தது. கடைசியாக, அச்சுக்கு ஏற வேண்டிய பக்கத்தைப் பார்க்கும் வேலை, உதவி ஆசிரியருக்கு என்பதால், நான் வீட்டிற்குக் கிளம்பிப் போனேன். மறுநாள் காலை என் மேஜைக்கு வந்திருந்த தமிழ் இதழின் முதல் பிரதியைப் பார்த்தபோது அதிர்ச்சியுற்றேன். காரணம், நான் அடித்திருந்த வரி அதில் சேர்க்கப்பட்டிருந்தது. உதவி ஆசிரியரிடம் விளக்கம் கேட்டால், அச்சுக்குச் செல்ல இருந்த நேரத்தில் ஒரு வரி தேவைப்பட்டதால், அதைச் சேர்த்தேன் என்றார். அந்தக் கட்டுரை கலைஞரை கோபப்படுத்தும் என்று எனக்குத் தெரியும். நான் நினைத்ததுபோலவே நடந்தது.

அந்த வாரத்தில் ஞாயிறு அன்று வெளிவந்த முரசொலியின் சிறப்பு இணைப்பு எனக்காகவே ஒதுக்கப்பட்டிருந்தது. முகப்பில் என்னுடைய புகைப்படத்துடன்‘ ‘வா[ச]ந்தி’என்று ஆரம்பித்து, என்னைக் கடும் விமர்சனம் செய்திருந்தது ‘முரசொலி’. நான் அதிர்ந்து போனேன். அந்த மாதிரியான ஒரு தாக்குதலை, என் வாழ்நாளில் சந்தித்ததில்லை. அதற்கெல்லாம் பதில்சொல்வதற்கு எனக்குத் தெம்பும் இல்லை என உணர்ந்து கொண்டேன்.

முரசொலி வாசலில்

அதன்பின், அவரது நேர்காணல் ஒன்றைத் திட்டமிட்டோம். ‘இந்தியா டுடே’ ஆங்கிலப் பதிப்பின் சென்னை கிளையின் தலைமை நிருபர், நிருபமா சுப்ரமணியன் என்பவர் கலைஞரின் உதவியாளர் சண்முகநாதனைத் தொடர்பு கொள்ள, பேட்டி கொடுக்க கலைஞருக்கு விருப்பமில்லை” என்று பதில் வந்தது. அதன்பின்னர், சண்முகநாதனை நான் தொடர்பு கொள்ள, “தலைவருக்கு இஷ்டமில்லை” என்று சொல்லி இணைப்பைத் துண்டித்தார்.

நான் நேரிடையாக, கலைஞரைச் சந்திப்பது என்று முடிவு செய்தேன். அவர் தினமும் காலை 10 மணிக்கு முரசொலி அலுவலகத்துக்கு வருவார் என்று கேள்விப்பட்டிருந்தேன். நானும் நிருபமாவும் மறுநாள் காலை ‘முரசொலி’ அலுவலக வாசலில் நின்றோம். நல்ல வெயிலில் அரை மணிநேரமாகக் காத்திருந்த நேரத்தில் கலைஞரின் கார் வந்தது. எங்களைப் பார்த்து அவருக்கு வியப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். வண்டியை நிறுத்தி, கண்ணாடியை இறக்கி ‘என்ன வேணும்’ என்றார். நான் தயக்கத்துடன், “தயவுசெய்து ‘இந்தியா டுடே’வுக்கு நீங்கள் ஒரு பேட்டி தர வேண்டும்” என்றேன். “நாளை பத்து மணிக்கு கோபாலபுரத்துக்கு வாங்க” என்றார். அவரது கார் கிளம்பிவிட்டது. இவ்வளவு எளிதில் முடிந்த அந்த நிகழ்வினை என்னால் நம்ப முடியவில்லை.

மறுநாள் காலை 9.30 மணிக்கே கோபாலபுரத்தில் நின்றோம். மிகச் சரியாக கலைஞர் 10 மணிக்கு பேட்டிக்கு வந்து அமர்ந்தார். ‘இந்தியா டுடே’வில் வந்த கட்டுரையைப் பற்றி அவர் கேட்டால், அதற்கு சாதுர்யமாக பதில் சொல்ல வேண்டும் என மனதுக்குள் தயாரித்து வைத்திருந்தேன். ஆனால், அவரோ பேட்டி ஆரம்பிக்கும் முன்பாகவே என்னைப் பார்த்து ‘முரசொலியிலே அந்தக் கட்டுரை என் பார்வைக்கு வராமலே எழுதிட்டாங்க” என்றார். நான் என் வியப்பை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவருக்குத் தெரியாமல் அது நடந்திருக்காது என்று எனக்குத் தெரியும். ஆனால், அதற்கு வருந்துவதுபோல அவர் பேசியதும், ஒரே வரியில் என்னை அவர் சமாதானப்படுத்திய பண்பும் என்னை மிகவும் கவர்ந்தது. அந்தப் பேட்டி நிறைவாக அமைந்தது. அதற்குப் பிறகு பலமுறை அவரை அவரது இல்லத்தில் சந்திக்க, எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

நான் சொன்னதைத் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. கோபப்படவில்லை. எனக்கு அதை நினைத்தால், இப்போதும் ஆச்சரியம் ஏற்படும்.

எளிமையான அணுகுமுறை

அவரை எப்போதும் எளிமையாக அணுக முடிந்தது. நான் தொலைபேசியில் அழைத்தால், உடனடியாகப் பதில் அளிப்பார். அவரைப் பேட்டி எடுப்பதும் அவருடன் உரையாடுவதும் எனக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கும். மிகச் சரளமாகப் பேசுவார். பல அரசியல் நிகழ்வுகளைப் பற்றி தனது தனிப்பட்ட கருத்துகளைச் சொல்வார். அவரது கவலைகள், பயங்கள் அவற்றில் வெளிப்படும். அவருடைய நிஜ முகம் அது என்று எனக்கு வியப்பு ஏற்படும்.

அவர் முதல்வர் பதவி வகித்த நேரத்தில், நான் வாரந்தோறும் ‘சிந்திக்க ஒரு நொடி’ என்கிற பத்தி எழுதி வந்தேன். இதழ் வெளியான அன்று காலையில் அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வரும். பிடித்தால் பாராட்டுவார். பிடிக்காவிட்டால், எதிர்ப்பை வெளிப்படுத்துவார்.

ஒரு முறை ஓர் ஆங்கில நாளிதழில் அவரை விமர்சித்து தலையங்கம் எழுதப்பட்டிருந்தது. அப்போது, நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில், அந்தத் தலையங்கத்தை எதிர்த்து, மிகக் கடுமையாகப் பேசினார். ‘நான் சூத்திரன் என்ற காரணத்தாலேயே அப்படி எழுதுகிறார்கள்’ என்று கூறியிருந்தார். நான் அதை விமர்சித்து பத்தி எழுதியிருந்தேன். ‘இத்தனை உயர்ந்த பதவியில் இருந்தும், ஏன் இந்தத் தாழ்வு மனப்பான்மை?’ என்று அந்தப் பத்தியில் கேள்வி எழுப்பியிருந்தேன். மறுநாள் விடிந்த உடனேயே அவரிடமிருந்து போன் வந்தது. ‘என்ன அப்படி எழுதிட்டீங்க?’ என்றார். ‘உங்க பேச்சு எனக்கு சரின்னு படவில்லை’ என்றேன். அப்போது அவர் முதல்வராக இருந்தார். அவர், தான் அப்படிப் பேசியதற்கான காரணத்தை விளக்கினார். “இருந்தும் நீங்கள் ஒரு அறிஞர், கலைஞர், முக்கியமாக தமிழ்நாட்டின் முதலமைச்சர். முதல்வர் பொறுப்பில் இருப்பவர், அப்படிப் பேசியது சரி என்று எனக்குத் தோணவில்லை’என்றேன். அவர் பதில் சொல்லவில்லை.

நான் சொன்னதைத் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. கோபப்படவில்லை. எனக்கு அதை நினைத்தால், இப்போதும் ஆச்சரியம் ஏற்படும். அவர் முதலமைச்சர் என்கிற பயமோ தயக்கமோ எனக்கு இருக்கவில்லை. அவருக்குக் கோபம் வரவில்லை என்பதுதான், வியப்பைத் தரும் விஷயம். அவருடன் அப்படிப் பேசும் சுதந்திரம் அவரது ஆட்சியில் பத்திரிகையாளர்களுக்கு இருந்தது.

விமர்சித்தாலும் மரியாதை

அவரை நான் எனது பல பத்திகளில் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். அவருக்கு அவை எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று, நினைத்துப் பார்த்ததில்லை. அவர் தலைமைதாங்கிய ஒரு பொதுநிகழ்ச்சியில் , மேடையில் அவருக்கு அடுத்த இருக்கையில் அமர்ந்திருந்தேன். நான் அவரிடம் மெல்ல, “உங்களை நான் கடுமையாக விமர்சித்தாலும் உங்கள் மேல் எனக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு” என்றேன். அவர் என்னைப் பார்த்து, “எனக்கு அது தெரியுமே” என்றார் புன்சிரிப்புடன்.

அவர் நள்ளிரவில் கைதாகி பிறகு வெளியே வந்திருந்த நேரம். அறிவாலயத்தில் ஒரு புத்தக வெளியீடு. அரங்கம் நிரம்பி வழிந்தது. கூட்டம் அவரைப் பார்த்ததும் உணர்ச்சி வசப்பட்டது. அவர் வெளியிட்ட புத்தகம் குறித்து நான் உரையாற்றினேன். மேடையில் இருந்தவர்கள் கலைஞரைப் பற்றி பேசினார்கள். ‘உன் கை பட்டால் தமிழ் துலங்கும், உன் மேல் கை பட்டால், தமிழ் குலுங்கும்’ என்றார் கவிஞர் வாலி. கலைஞரின் கண்களில் நீர் நிரம்பிற்று. அவருக்கு வேண்டியிருந்தது ஆதரவாளர்களின், தொண்டர்களின் அன்பு. அந்த அன்புதான் அவரை மாபெரும் தலைவராக உருவாக்கியது என்றால், மிகையில்லை.

தொகுப்பு :
நீரை மகேந்திரன் ....பகிர்வார்கள்

பா.ஜ.க. ஆளும் மாநிலத்தில் இந்தி எதிர்ப்பு!

1938-இல் முதல் மொழிப்போரைத் தொடங்கிய திராவிட இயக்கம், இன்றும் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கிறது. 1965-இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகவே, ‘இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும்வரை இந்தி திணிக்கப்படாது’ என்ற உறுதிமொழியைத் தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால், திராவிட இயக்கத்தின் இந்தித் திணிப்புக்கு எதிரான போர்க்குணத்தை, ‘குறுகிய நோக்கம் கொண்ட பிரிவினைவாதம்’ என்று சித்தரித்தவர்கள் பலர். ஆனால், திராவிட இயக்கம் முன்வைத்த சமூகநீதித் தத்துவத்தை எப்படி இன்று இந்தியா முழுவதும் ஏற்று, ஆதரவுக்குரல்கள் எழுகின்றனவோ, அதேபோல் திராவிட இயக்கத்தின் இந்தித் திணிப்பு எதிர்ப்பில் உள்ள நியாயத்தை, மற்ற மாநிலங்களும் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய தொடங்கி இருக்கின்றன என்பதற்கு உதாரணம், சமீபத்தில் சமூக வலைதளங்களில் பரவலாகப் பகிரப்பட்ட ஒரு சிறு வீடியோ.

வெறும் 30 வினாடிகள் கொண்ட வீடியோதான் அது. ஆனால், ‘உத்தரப்பிரதேசத்தின் மொழி இந்தி’ என்னும் பொய்யைக் கட்டவிழ்க்கிறது அந்த வீடியோ. அந்தக் காணொலித் துண்டில் தோன்றிப் பேசும் இளம்பெண், ‘உத்தரப்பிரதேசத்தின் மொழி இந்தி என்று சொல்லப்படுவது தவறு. வடகிழக்கு உத்தரப்பிரதேசத்தில் பேசப்படும் மொழி கௌரவி, பிரஜ் பகுதியில் பிரஜ் என்ற மொழி பேசப்படுகிறது, பண்டல்காண்ட் பகுதியில் பேசப்படும் மொழி பண்டேலி, மத்திய உ..பி.யில் பேசப்படும் மொழி கன்னாஜி, அவத் பகுதியில் பேசப்படும் மொழி அவடி, தெற்கு உ..பி.யில் பேசப்படும் மொழி பகேலி, கிழக்கு உ.பி.யில் பேசப்படும் மொழி போஜ்பூரி” என்று வரிசையாக அடுக்குபவர், “உத்தரப்பிரதேசத்தில் 5 சதவிகித மக்கள் உருது பேசுகிறார்கள்” என்கிறார்.

இந்தி பேசும் மாநிலமாக அறியப்படும் உத்தரப்பிரதேசத்திலேயே, அதிலும் பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசத்திலேயே இந்திக்கு எதிரான குரல் எழுகிறது என்றால், அதற்கான முன்னோடியாக இருப்பது, தமிழ்நாடும் மொழிப்போரை முன்னெடுத்த திராவிட இயக்கமும்தான்.

:ப்ளாஷ்பேக்

ம.ஆதிலட்சுமி மகேந்திரன்

தலைவர் கரங்களால் வெற்றிச் சான்றிதழ்!

2008-ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் திறந்து வைத்தார். அந்த நிகழ்ச்சியின்போது, காவேரிப்பட்டினம் ஒன்றியக் குழுப் பெருந்தலைவராக நான் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை, தலைவர் அவர்கள் வழங்கினார். அப்போது அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய முதலமைச்சருமான அண்ணன் தளபதி அவர்கள் உடன் இருந்தார். விவசாயத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், அன்றைய மாவட்டக் கழக செயலாளராக இருந்த டி.செங்குட்டுவன் அவர்களும் உடனிருந்தனர்.

– ம.ஆதிலட்சுமி மகேந்திரன்,
தலைவர், மகளிர் தொண்டர் அணி,
கிருஷ்ணகிரி கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

கருவூலம்

வடநாட்டில் பெரியார்!

1941-ஆம் ஆண்டு, அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்கி, டிசம்பர் இறுதிவரை சுமார் 3 மாதங்கள் வடநாட்டுச் சுற்றுப்பயணம் செய்தார் பெரியார். அந்தப் பயணத்தின்போது சிறுதும், பெரிதுமான பல கூட்டங்களில் பெரியார் பேசினார். அனைத்துக் கூட்டங்களிலும் திராவிட இயக்கக் கருத்துகளை அவர் வலியுறுத்தத் தவறவில்லை. கூட்டங்களில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பெரியார் பதில் அளித்துள்ளார்.

திராவிடத்தால் வாழ்கிறோம்

662

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131